# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் திருமுழுக்கு | 26 ஜனவரி 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
### திருஅவை - இரக்கத்துடன் இருக்க அழைப்பு

# கிறிஸ்துவின் உடலில் ஒற்றுமை

கிறிஸ்துவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் செய்யும் வாரத்தின்போது, கிறிஸ்துவர்கள் அனைவரும் ஒன்றுகூடுவார்கள். “அவர்கள் அனைவரும் ஒன்றாயிருப்பார்களாக” என்று இயேசு அவரின் சீடர்களுக்காக வேண்டியதை நாம் நினைவுகூருவோம். பாரம்பரியமாக இந்த நிகழ்வு ஜனவரி 18-25 தேதிகளுக்கு இடையில் நடைபெறுகிறது. உரோமையில் கிறிஸ்துவ ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான பேராயம், திருஅவை ஏற்கெனவே அடைந்துள்ள ஒற்றுமையின் அளவை வெளிப்படுத்துவதற்கும், கிறிஸ்துவின் விருப்பமான அந்த முழு ஒற்றுமைக்காக இறைவேண்டல் செய்வதற்கும் ஆண்டு முழுவதும் பயன்படுத்துவதற்காக அதன் பிற சபைப் பங்காளிகளுக்குத் தேவயானவற்றை தரவும் தயாராயுள்ளது.




கிறிஸ்துவ ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையில் இன்றைய ஞாயிறு வாசகங்கள் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளன. இன்றைய முதல் வாசகத்தில் எஸ்ரா பெண்கள் மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய குழந்தைகள் உட்பட, அனைவருக்கும் கடவுளின் வார்த்தையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறார். நாடு கடத்தப்பட்டபிறகு, கடவுளின் மக்கள் தங்களின் அடையாளமான தோரா என்னும் சட்டத்திற்கு தங்களை மறுஅர்ப்பணிப்பு செய்யவேண்டும் என்று கூறுகிறார்.

இந்த உலகில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டாலும் கிறிஸ்துவர்களாகிய நாம் நம்முடைய அடையாளத்தைக் கொண்டிருப்பது எவ்வளவு முக்கியம். அதனால் தான் ஒருவர் மற்றவரின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், சமூகத்தைக் கட்டியெழுப்பவும் ஒன்றுபடுவது முக்கியம். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் புத்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார். அவர்கள் பலராயிருந்தாலும் கிறிஸ்துவின் ஒரே உடல். உடல் பல உறுப்புகளைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொன்றும் தனித்துவமிக்கது. வேற்றுமையில் ஒற்றுமை என்பதையும், சகவாழ்வின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். நாம் ஒருபோதும் தனித்திருக்கமுடியாது ஆனால் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் நாம் பரஸ்பரம் மதிக்கவேண்டும். அக்கறைக் காட்டவேண்டும்.

பல்வேறு சமயங்கள் கலாச்சாரங்களைக் கொண்ட நமது நாட்டின் சூழலில் கிறிஸ்துவர்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. கடவுளின் அரசை அறிவிப்பது மற்றும் விடுதலையையும் குணமளித்தலையும் கொண்டு செல்லவேண்டுமென்று நற்செய்தி கூறுகிறது. கிறிஸ்துவின் உடலாகிய நம் வழியாக அவருடைய பணி தொடர்கிறது.

கடவுளின் சட்டம் எப்போதும் ஆன்மாவைப் புதுப்பித்து, ஞானத்தை தந்து, நம்மை வழிநடத்துகிறது என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். எனவே எளிய உள்ளத்தோடு இன்று இயேசுவைப் பெற்றுக்கொள்வோம். நாம் அனைவரும் ஒரே உடல்- ஒரே திருஅவையில் திருமுழுக்குப் பெற்றுள்ளோம் என்பதை நினைவுகொள்வோம். தூய ஆவியாரால் வலுவூட்டப்பெற்று கடவுள் நமக்குத் தந்த கொடைகளை அறிந்து ஏற்று, அதை நம் அண்டை அயலாரின் அன்பிற்காக திறம்பட பயன்படுத்தவேண்டும். இனம், சமயம், மொழிகளுக்கு அப்பாற்பட்டு இரக்கமுள்ள திருஅவையாகத் திகழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என்று அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். இறைவார்த்தையின்படி செயல்படுவோம், நம்முடைய நம்பிக்கையை வாழ்வோம். ✣

> உயிர்த்த ஆண்டவரோடும், புனிதர்கள், நம்பிக்கைக் கொண்ட சமூகம் மற்றும் புனித இறைவார்த்தை ஆகியவற்றோடு நாம் கொண்டுள்ள உறவு கிறிஸ்துவர்கள் என்ற அடையாளத்திற்கு மிகவும் இன்றியமையாதது.
>
> திருத்தந்தை பிரான்சிஸ் (Apostolic letter “APERUIT ILLIS”)

**இன்றைய இறைவார்த்தை:**

நெகேமியா 8: 2-6, 8-10

திருப்பாடல்: 19: 8-10,15

1 கொரி: 12: 12-30 (அ) 12-14, 27

லூக்கா 1: 1-4, 4:14-21

INTERNAL CIRCULATION ONLY
BUL 04/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org